**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR**

**OS NO.147-2010**

**PW1-- Santhappa**

வா.சா.**1** ஆஜர் ஆகி சத்தியப்பிரமாணத்தின் பேரில் **3, 4** பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:

**1.** நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் முழு விவரம் எனக்கு தெரியும். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்தை பொறுத்து வழக்கை தாக்கல் செய்துள்ளது என்றால் சர்வே எண்.50/1பியில் 0.62.05 ஹெக்டேர்ஸ் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளது. 1ம்பிரதிவாதி கிருஷ்ணப்பா எனக்கு தாத்தாவின் தாத்தா வழியில் உறவினர் ஆவர். சர்வே எண்.50/1பி என்பது ஆதியில் என்ன சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு என் பெயரில் வழங்கப்பட்டதாக சொல்லும் பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் பெயரில் வழங்கப்பட்ட பாட்டாவை 2004ம் ஆண்டில் மாற்றி விட்டார்கள். பட்டாவை யார் ரத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. பட்டா ரத்து செய்த பிறகு 1 ஆண்டு கழித்து எனக்கு தெரியவந்தது. அதன்பிறகு நான் சார் ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வட்டாட்சியரையும், சார் ஆட்சியரையும் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. என் பெயரில் வழங்கப்பட்டதாக சொல்லும் பட்டா யு.டி.ஆர். காலத்திற்கு முன்பு வழங்கப்பட்டது. அந்த பட்டா என் தந்தை பெயரில் வழங்கப்பட்டது. என் பெயரில் எப்போதும் பட்டா வழங்கப்படவில்லை. யு.டி.ஆர்க்கு முன்பு கிராம முன்சீப்பால் எனது தந்தை பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. மொத்தம் உள்ள 0.62.5 ஏர்ஸ்ம் என வசம் தான் உள்ளது. ஆனால் 25

செண்டிற்கு மட்டும் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறிவிட்டது. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ள 25 செண்டை 1ம் பிரதிவாதிமோரனப்பள்ளி பஞ்சாயத்திற்கு செட்டில்மெண்ட் கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2010 வருடத்தில் தெரியும் அதன்பிறகு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மோரனப்பள்ளி பஞ்சாயத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளபத்திரத்தை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை தண்டு முனியப்பா, கெம்பம்மா, கிருஷ்ணப்பா, பில்லப்பா ஆகியோர் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்சொன்ன கிருஷ்ணப்பாவை தவிர மேற்சொன்ன நபர்கள் யாரையும் நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**3.** 1ம் பிரதிவாதியும் மேற்சொன்ன நபர்களும் பஞ்சாயத்திற்கு எழுதி கொடுத்த பத்திரத்தை 11.07.2005 ம் தேதியில் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றாலும் எனக்கு அந்த விவரம் 2010 ஆண்டிலேயே தெரிந்துள்ள நிலையில் அந்த பத்திரத்தை ரத்து செய்ய கோரி இந்த வழக்கில் பரிகாரம் கோரவில்லை எனறால் சரிதான். சர்வே எண்.50/1 பி-1 ல் உள்ள 0.10.0 ஏர்ஸ்ஸில் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரோடு சர்வே எண்.50/1 பி1, 53/1 ஏ 3, 54/4, 56/2 ஏ ஆகியவற்றின் மூலமாகவும் செல்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன 10 ஏர்ஸ்ஸில் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும், அரசாங்கம் தான் அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது பிராதில் மாற்று பரிகாரமாக வழக்கு சொத்தை பிரதிவாதிகளிடமிருந்து சுவாதீனம் கோரியுள்ளேன் எனறால் சரிதான். நான் சொத்தின் சுவாதீணத்தில் இல்லாததால் வழக்கு சொத்தைப்பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரிதான்.

**4.** ஆவலமுனியப்பா, கிருஷ்ணப்பா, பைரப்பன், சொன்னன், சொன்னன்னன் ஆகியோர்களுக்கிடையில் 1914-ம் ஆண்டு பதிவு பாகப்பத்திர எண்.664/1914 ஏற்பட்டுள்ளது

என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கண்ட சொத்தின் சர்வே எண்.50 என்றாலும், அது 50/1 ஏ, 50/1 பி, 50/1 சி, 50/2 எ முதல் 2 எச் வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பெயரில் வழக்கு சொத்திற்கு வழங்ககப்பட்டதாக சொல்லும் பட்டாவை தாக்கல்ம செய்யவில்லை என்றாலும், பட்டாவை ரத்துசெய்ததாக சொல்லும் அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும், பட்டா ரத்து உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதனால் இவ்வழக்கு செல்லாது என்றாலும் சரியல்ல. மோரனப்பள்ளி பஞ்சாயத்திற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த நபர்கள் அனைவரையும் இவ்வழக்கில் தரப்பினராகசேர்க்காததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அந்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. வழக்கு சொத்து அமைந்துள்ள ரோட்டிற்கு அருகில் ஓசூர் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மதிப்பு அதிகமானதால் அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே 3, 4 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

(ஒம்/-ஆர்.நரசிம்மமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.